**முக்கிய வார்த்தைகள்:**
உபகாரம்
மேன்மை
அருள்
நன்றி தெரிவித்தல்

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**07 ஆகஸ்ட் 2026 / 23 ஸஃபர் ஹிஜிரி 1448**

# <u>ஓரிறை நம்பிக்கையாளர் விட்டுச் செல்லும் பரம்பரைச் சொத்து</u>

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَى فِي ٱلتَّنْزِيلِ: يَاأَيُّهَا ٱلَّذِينَ آمَنُوا ٱتَّقُوا ٱللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் கட்டளைகள் அனைத்தையும் நிறைவேற்றுவதன் மூலமாகவும், அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களைத் தவிர்ப்பதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான நமது "தக்வா" [பக்தியை] அதிகப்படுத்திக் கொள்வோமாக; எல்லாம் வல்ல அல்லாஹ், வாழ்நாள் முழுவதும் **இஹ்ஸான்** [உபகாரச் சிந்தனையை, நேர்மையை, நன்றியுணர்வை] சீராகக் கடைப்பிடித்து வாழும் தனது நல்லடியார்களில் ஒருவராக நம்மனைவரையும் ஆக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**
இன்றைய "குத்பா" பிரசங்கம், திருக்குர்ஆனின் "அல்-கஸஸ்" எனும் அத்தியாயத்தின் பின்வரும் 77-வது வசனத்தில் காணப்படும் அல்லாஹ்

சுப்ஹானஹு வதஆலாவின் கருத்துக்களில் சிந்தனை செய்யுமாறு நமக்கு அழைப்பு விடுக்கின்றது:

وَأَحۡسِن كَمَآ أَحۡسَنَ ٱللَّهُ إِلَيۡكَۖ

பொருள்: "அல்லாஹ் உனக்கு **நல்லதைச்** செய்திருப்பதைப் போல் நீயும் **நல்லதைச்** செய்"

எனது சகோதரர்களே! தற்போது ஓதப்பட்ட வசனமாகிறது, நமது மார்க்கத்தின் ஓர் முக்கியக் கொள்கையான **இஹ்ஸான்** எனும் உபகாரச் சிந்தனையின் மதிப்பை நிலைநாட்டுகிறது. நாம் செய்யும் ஒவ்வொரு **நற்செயலும்** அல்லாஹ் நம்மீது பொழிந்துள்ள எண்ணற்ற **அருட்கொடைகளுக்கு** நமது நன்றியின் வெளிப்பாடாக இருக்க வேண்டுமெனவும் அது நமக்குக் கூறுகிறது.

உண்மையில், ஒவ்வொரு நாளும் நாம் மன அமைதியுடன் நமது வாழ்வாதாரத்தைத் தேடி வெளியே செல்கிறோம்; நமது வாழ்க்கைத் துணைவர்கள் பாதுகாப்பாகவும் நலமாகவும் இருக்கின்றார்கள்; நமது பிள்ளைகள் பாதுகாப்பாக பள்ளிக்குச் சென்று விட்டு, வீடு திரும்புகிறார்கள்; அவர்களின் பாதுகாப்பைப் பற்றி நாம் அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை.

நாம் சிரம் பணிந்து அல்லாஹ்வின் கருணையை வேண்டுவதற்காக, நமது பள்ளிவாசல்களின் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கின்றன; நள்ளிரவில் அல்லது அதிகாலையில் பள்ளிவாசல்களுக்கு நடந்து செல்லும் போது நாம் உணரும் அந்த அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவை உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்பவர்களுக்குக் கிடைப்பதில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, நமது நாவின் நுனியால் வெறுமனே "அல்ஹம்துலில்லாஹ்" [எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே] எனக் கூறி, **நன்றியை வெளிப்படுத்தி** விட்டால் உண்மையிலேயே போதுமாகுமா? என நம்மை நாம் மனதாரக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

பிரபலமான ஹதீது ஒன்றில் ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்; அதன் பொருள்: *"**இஹ்ஸான்** என்றால் நீங்கள் அல்லாஹ்வைக் காண்பது போல் அவனை வணங்குவதாகும்; உங்களால் அவனைக் காண முடியாவிட்டாலும் நிச்சயமாக அவன் உங்களைக் காண்கின்றான் என்பதை நினைவில் கொண்டு அவனை வணங்க வேண்டும்"*

மேலும், இமாம் முஸ்லிம் [ரஹ்] அவர்கள் பதிவு செய்து அறிவிக்கும் மற்றொரு ஹதீதில் ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்: *"நிச்சயமாக, அல்லாஹ் எல்லா விஷயங்களிலும் **இஹ்ஸானைக்** கடமையாக்கியுள்ளான்"* என்று கூறியுள்ளார்கள்.

இந்த அறிவிப்புகளில் காணப்படும் "**இஹ்ஸான்**" என்பதன் போதனைகள், அல்லாஹ்வைப் பற்றிய ஒரு நிலையான விழிப்புணர்வை வளர்த்துக் கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன எனவும், இந்த விழிப்புணர்வை நாம் நமது இதயங்களில் கொண்டிருக்கும் போது, நாம் செய்யும் அனைத்து செயல்களையும் சிறப்பாகச் செய்யவும், தொடர்ந்து **மேன்மையை** அடையவும் முயற்சிப்போம் எனவும் அறிஞர்கள் விளக்கமளித் துள்ளார்கள்.

இதன் பொருள் யாதெனில், ஒரு ஓரிறை நம்பிக்கையாளர் பள்ளிவாசலிலோ, பணி செய்யும் இடத்திலோ, வகுப்பறையிலோ அல்லது பொது இடங்களிலோ எங்கிருந்தாலும் **சிறந்து விளங்க** வேண்டுமென அவர் அழைப்பு விடுக்கப்படுகின்றார் என்பதாகும்.

ஒரு "முஃமின்" அதாவது, ஓரிறை நம்பிக்கையுள்ள ஒரு பணியாளர், தன் மேலதிகாரிகளிடம் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக மட்டும் கடினமாக

உழைப்பவராக இருக்கமாட்டார்; ஓரிறை நம்பிக்கையுள்ள ஒரு மாணவர் தேர்வுகள் நெருங்கும் போது மட்டும் படிப்பவராக இருக்கமாட்டார். மாறாக, ஓரிறை நம்பிக்கையாளர் இரண்டு காரணங்களுக்காக ஒவ்வொரு கடமையையும் மிகுந்த அர்ப்பணிப்புடன் நிறைவேற்றுவார். ஒன்று, அல்லாஹ் எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்பதை அவர் நினைவில் கொள்வார். இரண்டாவது, அல்லாஹ்வின் திருப்தியையே அவர் நம்புபவராகவும் விரும்புபவராகவும் இருப்பார்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே**!

நமது **இஹ்ஸான்** எனும் உபகாரச் சிந்தனையானது, மற்றவர்களுக்கு மதிப்பையும் நன்மையையும் அளிக்கும் போது, உண்மையாகவே அது முழுமை அடைகிறது. ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் நமது சமூகத்தில் இது மிகவும் அவசியமான விஷயமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் அனுபவிக்கின்ற, பகிர்ந்து கொள்கின்ற அமைதி, முன்னேற்றம் மற்றும் நல்வாழ்வு ஆகியவை அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அருளாலும், நம்மில் உள்ள ஒவ்வொருவரின் கூட்டு முயற்சியாலுமே கிடைத்துள்ளது. இதுதான், **இஹ்ஸானின்** வெளிப்பாடாகும்.

ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் நமக்கு நினைவூட்டும் வகையில் கூறுகையில்: "பிறருக்கு மிகவும் நன்மை செய்பவர்களே அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமானவர்கள் ஆவர்" எனக் கூறியுள்ளார்கள். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அத்-தப்ரானீ ரஹ்]

நமது **நற்குணம், உபகாரச் சிந்தனை** அதாவது **இஹ்ஸான்** என்பது, பழக்கம், இனம், கலாச்சாரம் அல்லது பரம்பரை போன்ற எல்லைகளைக் கடந்ததாக இருக்க வேண்டும். நாம் பிறர் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் ஓரிறை நம்பிக்கையாளராகவோ, நம்பிக்கைக்குரிய ஊழியராகவோ, சமூகத்திற்கு **நன்மையைப்** பரப்பும் நபராகவோ ஆகும் போது, அதுவே நமது உண்மையானப் பங்களிப்பாக அமையும். அதுவே இஸ்லாத்தின் உண்மையான முகம் ஆகும். நாம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கும்

அளவற்ற அருட்கொடைகளுக்காக அல்லாஹ்வுக்கு **உண்மையாக நன்றி** செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

**எனது சகோதரர்களே!**
**இஹ்ஸான்** எனும் இந்த நற்பண்பைப் பின்பற்றுவதற்கு, பின்வரும் இரண்டு நடைமுறை வழிமுறைகளில் நாம் கவனம் செலுத்த வேண்டும்:

**முதலாவதாக: கஷ்டமான காலங்களில் இஹ்ஸானை வளர்த்தல்**
ஒரு ஓரிறை நம்பிக்கையாளரிடம் காணப்படும் **இஹ்ஸான்** எனும் நற்குணம், துன்பத்திலும் இன்பத்திலும் வெளிப்பட வேண்டும். நம்மைச் சுற்றியுள்ளவர்கள் சவால்களை எதிர்கொள்வதை நாம் காணும் போது அவர்களுக்கு, அவற்றுக்கானத் தீர்வுகளையும் உண்மையான ஆதரவுகளையும் வழங்குமாறு **இஹ்ஸான்** நம்மை அழைக்கிறது.

நமது சமூகத்தில் புதிய சவால்கள் எழும் போது அவற்றுக்கானத் தீர்வுகளைக் கண்டறிய நாம் ஒன்றிணைந்து செயல்பட ஒருபோதும் தயங்கக் கூடாது. நமது சமூகத்தைப் பொறுமையுடன் பேணி வளர்க்கும் நமது கல்வியாளர்கள், *அசாதிதாக்கள்* மற்றும் அறிஞர்களிடமும், இன்றைய சவால்களை எதிர்கொள்ள நமக்கு உதவும் வகையில் கவனமாக ஆராய்ந்து, சரியான நேரத்தில் வழிகாட்டுதலை வழங்கும் நமது ஃபத்வா [தீர்ப்பு] நிறுவனத்திடமும் இது அழகாகப் பிரதிபலிப்பதை நாம் காண்கிறோம்.

**இரண்டாவதாக: நமது சேவையையும் கருணையையும் விரிவுபடுத்துதல்**
உண்மையில், நம்மையும் நமது குடும்பத்தினரையும் கவனித்துக் கொள்வதே நமது முன்னுரிமையாக இருப்பது இயல்பான விஷயம் தான்; இருப்பினும் நம்மிடம் செல்வம், நேரம் அல்லது நிபுணத்துவம் ஆகியவை **ஏராளமாக** இருந்தால், நமது பங்களிப்பின் எல்லையை விரிவுபடுத்த வேண்டும். **நன்மை** நம்முடன் மட்டும் நின்று விடக் கூடாது. நம்மிடமுள்ள **அருட்கொடைகளைப்** பகிர்ந்து பங்களிக்க வேண்டும்; அப்போது தான், அவை கருணையின் தொடர்ச்சியான சங்கிலியை உருவாக்கி, நீடித்த நன்மையை நமக்குக் கொண்டு வரும்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

**இஹ்ஸான்** எனும் மதிப்பீட்டுக்கும் விழுமியத்துக்கும் உயிரோட்டம் கொடுப்பதற்கு, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் கிருபையால், நாம் எங்கிருந்தாலும் எந்தப் பங்களிப்பை நாம் செய்தாலும் **நன்மைக்கான** சக்தியாக நாம் இருக்க முயற்சிப்போமாக!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அர்-ரஹ்மான்" எனும் அத்தியாயத்தின் 60-வது வசனத்தில் நமக்குப் பின்வருமாறு மிகச் சிறப்பாக நினைவூட்டுகின்றான்:

هَلۡ جَزَآءُ ٱلۡإِحۡسَٰنِ إِلَّا ٱلۡإِحۡسَٰنُ ٦٠

பொருள்: "**நன்மைக்கு நன்மையைத்** தவிர வேறு கூலி உண்டா?"

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, எப்போதும் **நன்மை** செய்வதற்கான உறுதியையும் வலிமையையும் நமக்கு வழங்கி, நமது ஒவ்வொரு முயற்சியையும் **ஆசீர்வதித்து,** அமைதி, நல்லிணக்கம் மற்றும் நல்வாழ்வின் நிலையில் பாதுகாப்பானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْمُ.**

## <u>இரண்டாவது பிரசங்கம்</u>

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِين وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا

أَرْحَمَ الرَّاحِمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيا حَسَنَةً، وَفِي الآخِرَة حَسَنَةً، وَقِنا عَذابَ النارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالْمُنكرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُروا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.